| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.சா.சேதுராம வர்மா,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும்<br>இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி. |

ந.க.எண். 021504/பி1/2022 நாள். 17.05.2023

ஐயா/அம்மையீர்,

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – ஏப்ரல் 2023, பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வு – தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்கள் (Provisional Mark Certificate) விநியோகித்தல் – தொடர்பாக.

**பார்வை:** அரசாணை (நிலை) எண்.103, பள்ளிக்கல்வி ஜி(இ1) துறை , நாள்.19.05.2015.

******

19.05.2023 அன்று பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வுக்கான முடிவுகள் வெளியிட்ட பின்னர், **26.05.2023 பிற்பகல் 12.00 மணி முதல்** www.dge.tn.gov.in என்ற இணையதள முகவரிகளிலிருந்து அனைத்து மேல்நிலை / உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் தங்களுக்கான பள்ளித் தேர்வர்களுக்கும், தனித்தேர்வர் தேர்வுமைய பள்ளித் தலைமையாசிரியர்கள் தமது மையத்தில் தேர்வெழுதிய தனித்தேர்வர்களுக்கும் உரிய தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களை (**Provisional Mark Certificate**) பள்ளிகளுக்கு வழங்கப்பட்ட USER ID, PASSWORD–ஐக் கொண்டுபதிவிறக்கம் செய்து அச்சான்றிதழ்களில் உள்ள விவரங்களைச் சரிபார்த்து, பள்ளித் தலைமையாசிரியரின் கையொப்பம் மற்றும் பள்ளி முத்திரையிட்டுத் தயாராக வைத்துக் கொள்ள வேண்டும்.

மேற்படி தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களை (Provisional Mark Certificate) வருகிற 26.05.2023 **பிற்பகல் 12.00 மணி முதல்** பள்ளித் தேர்வர்கள் சம்பந்தப்பட்ட பள்ளிகளிலும்/தனித் தேர்வர்களுக்கு தேர்வெழுதிய தேர்வு மையம் மூலமாகவும் விநியோகம் செய்யப்படவேண்டும். .

**<u>கூடுதல் அறிவுரைகள்:–</u>**

1. பள்ளித் தலைமை ஆசிரியர்கள் பதிவிறக்கம் செய்யப்படும் தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களை சரிபார்த்து, அவற்றில் தேர்வரின் பிறந்த தேதி, தலைப்பெழுத்து, பெயர் (மாணவர், தாய், தந்தை/ பாதுகாவலர்), புகைப்படம், பயிற்று மொழி ஆகியவற்றில் ஏதேனும் பிழைகள் இருப்பின், தலைமையாசிரியரே அத்திருத்தத்தை மேற்கொண்டு தயார்நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும்.

..2..

2. **பிழைகள் அற்ற மதிப்பெண் சான்றிதழ்கள் அச்சமுத்தம் செய்து வழங்க ஏதுவாக தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களை விநியோகம் செய்த பின் அவற்றில் ஏதேனும் திருத்தங்கள் இருப்பின் அத்திருத்தங்களை பின்னர் இவ்வியக்கத்தால் அறிவிக்கப்படும் நாளன்று திருத்தங்களை ஆன்லைனில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.**

3. தேர்வர்களுக்கு மாற்றுச் சான்றிதழ் வழங்கும் போது மாற்றுச் சான்றிதழில் பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வு மதிப்பெண் சான்றிதழ் வரிசை எண்ணை எழுதும் கலத்தில் **"Refer Original Certificate"** என்று குறிப்பிட்டு தேர்வர்களுக்கு வழங்குமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

4. அசல் மதிப்பெண் சான்றிதழ்கள் அச்சமுத்தம் செய்து பெறப்பட்ட பின்னர், சம்பந்தப்பட்ட தேர்வருக்கான பள்ளியின் வசமுள்ள மாற்றுச் சான்றிதழ் பதிவேட்டின் Counter Foil–ல் சம்பந்தப்பட்ட தேர்வரது பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வு மதிப்பெண் சான்றிதழின் பதிவெண், வரிசை எண்ணை, பதிவு செய்து கொள்ள வேண்டும். மேற்படி Counter Foil–ல் மேற்கொள்ளப்படும் பதிவுகள் நிரந்தரமாக பின்வரும் காலத்தில் சரிபார்த்தலுக்காகப் பயன்படுத்தக்கூடிய வகையில் பராமரிக்கப்பட வேண்டும்.

**ஒம்/–**
**இயக்குநர்**

**<u>நகல்:</u>**

1. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.